## 64

# ஆகவே, நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றீர்களா?

### மத்தேயு 19:3-9, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*ஒரு திருமண வைபவத்தை நிகழ்த்திக் கொடுக்க நான் அனுமதிப்பதற்கு முன்பு, மணமக்களிடத்தில் - ஒருமுறையல்ல, ஆனால் பலமுறைகள் - தேவன் அவர்களிடத்தில் விரும்புகின்ற வகையிலானத் திருமணத்தைப் பற்றிப் பேசுவதை நான் வலியுறுத்துவதுண்டு. துரதிர்ஷ்டவசமாக எனது ஆலோசனை வகுப்புகள் பொதுவாக, திருமணத்திற்கு ஒரு சில வாரங்கள், ஒருவேளை ஒரு சில நாட்கள் அல்லது ஒரு சில மணிநேரங்கள் முன்னதாக மட்டுமே அமைந்து விடுகின்றன. அந்த வேளையில் நான், அவர்களின் சிந்தனையில் குறைந்தபட்ச செயல்வலிவைக் கொண்டுள்ளவனாகவே இருப்பேன். அடிக்கடி நான் அதே விஷயங்களைப் பல மாதங்கள் அல்லது பல ஆண்டுகளுக்கு முன்பாகக் கூட, அவர்கள் திருமணம் செய்துகொள்ளுவதைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தபோதே கூறியிருக்க முடிந்தால் நல்லதே என்று விரும்பியிருக்கின்றேன். இந்த பிரசங்கத்தில் அதைச் செய்வேன் என்றே நான் நம்புகின்றேன்.*

*நான் இந்த பிரசங்கத்தை, "ஆகவே நீங்கள் திருணம் செய்து கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றீர்களா?"[1] என்று அழைக்கின்றேன். நீல் பிரையர் அவர்கள், ஆராதனைக்கு முன்னதாகப் பிரசங்கியாரிடத்தில் சென்ற இரு இளம் மணமக்கள், தாங்கள் திருமணம் செய்துகொள்ளுதல் பற்றி அவரிடத்தில் பேச விரும்புவதாகக் கூறியது பற்றி எடுத்துரைத்தார். ஆராதனைக்குப் பின்பு அவர்களுடன் பேசுவதற்குப் பிரசங்கியார் சம்மதித்தார். ஆராதனையின் முடிவில், பிரசங்கியாரால் அவர்களின் பெயர்களை நினைவில் வைத்திருக்க முடியவில்லை, எனவே அவர், "திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றவர்கள் கடைசி ஜெபத்திற்குப் பின்பு, எனது அலுவலகத்திற்கு வாருங்கள்" என்று அறிவித்தார். நீல் அவர்களின் கூற்றுப்படி, ஒரு ஆணும் பன்னிரெண்டு*

பெண்களும் அவ்வாறு வந்தார்கள்.[2] இருப்பினும், திருமணம் ஆகாதவர்களில் பெரும்பான்மையானவர்கள் - ஆணோ பெண்ணோ யாராயிருப்பினும் - திருமணம் செய்துகொள்ளுதல் பற்றிச் சிந்தித்துள்ளனர். வாழ்வுக் காலம் முழுவதற்குமான உறுதிப்பாடுகள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர், இப்போதே இந்தத் தலைப்பிற்குத் தீவிரமான சிந்தனையைக் கொடுக்க வேண்டிய வேளையாக உள்ளது.

திருமணத்தைப் பற்றி நான், ஒரு இளம் மணமக்களிடத்தில் பேசுகின்ற போது, பொதுவாக நான் மத்தேயு 19:3-9ஐக் கொண்டே தொடங்குவேன்.[3] அதையே நான் இந்த வேளையில் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.[4]

## திருமணம் தேவனால் நிறுவப்பட்டதாக உள்ளது (மத். 19:4-6)

திருமணம் கர்த்தரால் நிறுவப்பட்டது (மத். 19:4, 5). தேவன் உலகத்தைப் படைத்தபோது, தனிமையாயிருத்தல் என்பதே அவர் "நல்லதல்ல" என்று அழைத்த முதல் விஷயமாக இருந்தது (ஆதி. 2:18). கர்த்தர், ஆணுக்குப் பெண்ணை "ஏற்ற துணையாக" படைத்தார் (ஆதி. 2:18).[5] பெண்ணைப் படைத்தது பற்றிய வரலாறு ஆதியாகமம் 2:21, 22ல் காணப்படுகிறது. ஆணை ஆண்டுகொள்ளும்படி அவனது தலையிலிருந்தோ அல்லது ஆண் மிதித்து நசுக்கும்படி அவனது காலில் இருந்தோ பெண்ணானவள் எடுக்கப்படவில்லை, ஆனால் அவனுக்கு எப்போதும் அருகாமையிலும் அன்பார்ந்த வகையிலும் மற்றும் அவனது பாதுகாப்பின் கீழ் இருக்கவுமே அவள் அவனது விலாவிலிருந்து எடுக்கப்பட்டாள் என்று கூறப்படுவதுண்டு.

திருமணம் என்பது தெய்வீகத்தில் தனது தொடக்கத்தைக் கொண்டதாக இருப்பதால், இது தேவனுடைய அதிகாரத்தின்கீழ் உள்ளது. உண்மையிலேயே மகிழ்ச்சியான திருமணம், தேவனைப் பிரியப்படுத்தும் திருமணம் என்பது, தேவனுடைய வசனத்தில் காணப்படும் நியமங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

## திருமணத்திற்கு ஆயத்தப்படுதல் தேவையாயிருக்கிறது (மத். 19:4-6)

நல்ல திருமணம் என்பது தற்செயலாக நடந்து விடுவதில்லை. திருமணத் திற்குத் தேவனுடைய ஒரு சில தேவைகள் நமது வேத பாடப் பகுதியில் காணப்படுகின்றன.

திருமணத்திற்கு ஒரு தனித்தன்மை என்பது தேவையாயிருக்கிறது. தேவன் "அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்" (வ. 4). அவர்களை அவர், ஆணும் ஆணுமாகவோ அல்லது பெண்ணும் பெண்ணு மாகவோ உண்டாக்கவில்லை. ஓரினச்சேர்க்கைத் திருமணங்கள் என்று அழைக்கப்படுபவை கர்த்தருக்கு அருவருப்பானவைகளாக உள்ளன

*(ரோமர் 1:26, 27).*

*திருமணத்திற்கு ஒரு விட்டுவிடுதல் என்பது தேவையாயிருக்கிறது: "இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு" (மத். 19:5). திருமணம் என்பது ஒரு புதிய உறவை நிலைநாட்டுதலாக உள்ளது.*

- *சாத்தியப்பட்டால், சரீரப்பிரகாரமான விட்டுவிடுதல் ஒன்று இருக்க வேண்டும். ஒரு இளைஞனும் ஒரு இளம்பெண்ணும் தங்கள் சொந்த இல்லத்தைக் கொண்டிருக்க வேண்டும். மாமன் மாமிகள் என்பவர்கள், புதிதாகத் திருமணம் செய்து கொள்பவர்களின் மத்தியில் திருமண நிலையில் விரோதத்திற்கான மிக மேலான மூன்று காரணங்களில் ஒரு காரணமாக உள்ளனர்.*[6]
- *பொருளாதார ரீதியாக விட்டுவிடுதல் ஒன்று இருக்க வேண்டும். ஒரு இளைஞன், ஒரு குடும்பத்திற்கான பொருளாதாரப் பொறுப்புக்களை மேற்கொள்ளத் தயாராகாத வரையிலும், அவன் அநேகமாகத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது.*[7] *நிதிநிலைகள் என்பது திருமண நிலையில் விரோதத்திற்கான மிக மேலான மூன்று காரணங்களில் இன்னொன்றாக உள்ளது.*
- *எல்லாவற்றிற்கும் மேலாக, உணர்வுப்பூர்வமான விட்டுவிடுதல் ஒன்று இருக்க வேண்டும். தனது மனைவியிடத்தில், "[என்] அம்மா இந்த மாதிரி சமைக்க மாட்டார்கள்" என்று சொல்லும் இளைஞனோ அல்லது, தனது கணவரிடத்தில், "[என்] அப்பாவுக்கு இதை எப்படிச் செய்வது என்பது தெரியும்" என்று சொல்லும் இளம் பெண்ணோ, உண்மையில் இன்னும் "தகப்பனையும் தாயையும் விட்டுவிடவில்லை." நீங்கள் திருமணம் செய்துகொண்ட பின்பு, நீங்கள் இன்னமும் உங்கள் தகப்பனையும் தாயையும் நேசிக்கின்றீர்கள், ஆனால் உங்கள் உறவு மாறுபட்டதாக உள்ளது. அந்த வேளையில் இருந்து உங்கள் வாழ்வில் உங்கள் திருமணத்துணைதான் மிக முக்கியமான நபராக இருக்கவேண்டும்.*

*திருமணத்திற்கு ஒரு இசைந்திருத்தல் என்பது தேவையாயிருக்கிறது: ஒரு மனிதன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்திருக்கின்றார் (மத். 19:5ஐக் காணவும்). "இசைந்திருத்தல்*[8] *என்பதற்கான எபிரெய வார்த்தையே பசை என்பதற்கான எபிரெய வார்த்தையாகவும் உள்ளது."*[9] *இரு பலகைகள் ஏற்ற வகையில் ஒன்றாக ஒட்டப்பட்டிருக்கிறபோது, அந்தப் பிணைப்பானது மரத்தைவிடப் பலம் வாய்ந்ததாக உள்ளது. அந்தப் பலகைகள் இனியும் தொடக்கத்தில் இருந்தது போன்று இரு தனித் தனியான அலகுகளாகப் பிரிக்கப்பட இயலாது; அவற்றைப் பிரிப்பதற்குச் செய்யப்படும் எந்த முயற்சியும் அவற்றில் ஒன்றுக்கோ மற்றதற்கோ அல்லது இரண்டுக்குமோ எவ்வித மாறுதலுமின்றி, சேதத்தை விளைவிக்கின்றது.*

*திருமணத்திற்கு ஒரு ஒருமைப்பாடு என்பது தேவையாயிருக்கிறது: "அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் ... அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்" (வ. 5ஆ, 6அ).*

- *சட்டப்பூர்வமான* ஒருமைத்தன்மை இருக்க வேண்டும். நாட்டின் சட்டங்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது (ரோமர் 13:1), இது திருமணம் பற்றிய சட்டங்களையும் உள்ளடக்குகிறது.
- *உடல்ரீதியான* ஒருமைத்தன்மை இருக்க வேண்டும். "ஒரே சரீரம்" என்ற சொற்றொடரானது பாலுறவு தொடர்பான உறவுமுறைக்கு விசேஷித்த குறிப்பைக் கொண்டுள்ளது (1 கொரி. 6:16ஐக் காணவும்). இந்த உறவானது திருமணத்தில் அழகுமிக்கதாகவும், திருமணப் பிணைப்புக்களுக்குப் புறம்பாக அழகற்றதாகவும் இருக்கிறது. காதல் வயப்பட்டிருக்கும் காலம் என்பது பாலுறவுப் பரிசோதனைக்கான காலம் அல்ல. உண்மையான உடல் ஒருமைத்தன்மையைச் சாதித்தலுக்கு காலம், பொறுமை, மற்றும் அந்தப் பிற நபர்மீதான அக்கறை ஆகியவை தேவைப்படுகின்றன. பாலுறவு என்பது திருமண நிலையில் விரோதத்திற்கான மிக மேலான மூன்று காரணங்களில் மூன்றாவதாக உள்ளது.
- *உணர்வுப்பூர்வமான* ஒருமைத்தன்மை இருக்க வேண்டும் (எபே. 5:28, 29ஐக் காணவும்). இது செய்தித் தொடர்பு கொள்ளக் கற்றுக் கொள்வதையும் ஒன்றுகூடி விஷயங்களைச் செய்வதையும் உள்ளடக்குகிறது. உங்கள் திருமணத்தை ஒருபோதும் சலுகை யானதாக எடுத்துக்கொள்ளாதீர்கள்; நல்ல திருமணத்தைக் கட்டி யெழுப்புதல் என்பதற்கு ஒரு வாழ்நாள் முழுவதும் தேவைப்படுகிறது.
- எல்லாவற்றிற்கும் மேலாக, *ஆவிக்குரிய* ஒருமைத்தன்மை இருக்க வேண்டும்: இது கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையில் நிலவுகின்றது போன்ற வகையிலான ஒருமைத்தன்மையாக உள்ளது (எபே. 5:31-33). நீங்கள் இருவரும் ஒன்றாக, "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளரும்படிக்கு" (2 பேது. 3:18) நீங்கள் திருமணம் செய்து கொள்வதற்கு விசுவாசம் நிறைந்த ஒரு கிறிஸ்தவளை/ கிறிஸ்தவரைக் கண்டடையத் தேவன் உதவி செய்யும்படி இப்போது ஜெபியுங்கள். கர்த்தருக்கான பரஸ்பர அன்பைப் போன்று, ஒரு திருமணத்தை ஒன்றாகப் பிணைத்து, அது இருக்க வேண்டிய நிலையில் வைக்கக் கூடியது வேறெதுவும் இருப்பதில்லை.

## திருமணம் என்பது வாழ்நாள் முழுவதற்குமானதாக உள்ளது (மத். 19:6-9)

திருமணம் என்பது நிலைப்புத் தன்மை வாய்ந்ததாக உள்ளது என்பது நீங்கள் புரிந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயமாக உள்ளது: "ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" (மத். 19:6ஆ).[10] திருமண முறிவை[தள்ளிவிடுதலை]த் தேவன் வெறுக் கின்றார் (மல். 2:16). "இது பணிக்கு உதவுமென்றால், இது வாழ்நாள் முழுவதற்குமானதாகும்" என்ற எண்ணப்போக்குடன் நீங்கள் திருமண வாழ்வில் பிரவேசித்தால், உங்கள் திருமண வாழ்வானது சீரழிவுக் குள்ளாகும். ஆகையால், உங்கள் திருமண வாழ்வில் பிரச்சனைகள் வரும்

*போது (அவைகள் வரும்), திருமண முறிவு என்பது ஒரு விருப்பத் தேர்வாக இருப்பதில்லை. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கர்த்தருடைய சித்தத்தைச் செய்வதற்கு உறுதிப்பாட்டுடன் இருந்தால், அவர்கள் அவருடைய உதவியுடன் எந்தப் பிரச்சனையையும் தீர்த்துக்கொள்ள முடியும் (பிலி. 4:13).*

---

*குறிப்புகள்*

*[1]நான் முதன் முதலில், இந்தத் தலைப்பைப் பயன்படுத்தி, நவம்பர் 1961ல், ஒக்லாஹாமாவில் வகோனெர் என்ற இடத்தில் ஒரு இளைஞர் குழுவினருக்கு உரையாற்றினேன். செப்டம்பர், 1985ல், நீல் பிரையர் அவர்கள், டெக்ஸாஸில் உள்ள ஃபோர்ட்வொர்த் என்ற இடத்தில் பிரவுன் ட்ரையல் கிறிஸ்துவின் சபையில் இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கு "ஆகவே, நீங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றீர்கள்" என்ற தலைப்பில் ஒரு உரையாற்றினார். அந்தத் தலைப்பும் இதே போன்றதாகவே இருந்தது, ஆனால் அணுகுமுறை சற்று வித்தியாச மாக இருந்தது. தொடர்ந்து வரும் கதையானது பிரையர் அவர்களின் பாடத்தி லிருந்து எடுக்கப்பட்டது. [2]நான் சிலவேளைகளில், ''ஏய், என்மீது பிரமிப்பு அடையாதீர்கள். இது நீல் பிரையர் அவர்களின் கதை என்பது நினைவிருக்கிறதா?" என்று கூடுதலாகக் கேட்பதுண்டு. [3]இந்த வேத பாடப்பகுதிக்குப் பின்னணியை நீங்கள் விளக்கியுரைக்க விரும்பலாம், இது முந்தின பாடத்தில் தரப்பட்டது. (''நீங்கள் கேள்விகளைக் கொண்டிருக்கும் போது'' என்ற பாடத்தை மறு கண்ணோட்டமிடுங்கள்.) [4]இங்கு தரப்பட்டுள்ள தகவல், எனது எடுத்துரைப்பின் தொகுப்புரையாக உள்ளது. இதை நீங்கள் விரித்துரைக்க, விவரிக்க மற்றும் நடைமுறைப்படுத்த விரும்புவீர்கள். [5]*KJV*யில் *"help meet" *என்றுள்ளது.* "Meet" *என்பது பொருத்தமான என்பதற்கான ஒரு பழைய ஆங்கில வார்த்தையாக உள்ளது. [6]திருமணமான நிலையில் சச்சரவுக்கான காரணங்கள் பற்றிய வாக்கெடுப்புகள் சற்றே மாறுபடுகின்றன, ஆனால் மாமன்-மாமிகள், பணம் மற்றும் பாலுறவு ஆகியவை எவ்வித மாற்றமும் இன்றி, பட்டியலில் மேலிடத்திற்கு அருகில் உள்ளன. [7]கணவர் தமது மனைவிக்குத் ''தலையாக'' இருக்க வேண்டும் (எபே. 5:23). இந்தத் தலைமைத்துவமானது அவரது மனைவியைப் பராமரித்தல் என்ற பொறுப்பைவிட அதிகமாக ஒரு தனிச் சலுகை என்பதாக இருப்பதில்லை (எபே. 5:28, 29), இது நிதிநிலைசார்ந்த பொறுப்பையும் உள்ளடக்குகிறது. இளைஞர்களும் இளம் பெண்களும் ஆகிய இருசாராருமே பணியாற்ற வேண்டியிருக்கலாம், ஆனால் கணவர்/தந்தை என்பவர் தமது குடும்பத்தின் உடல்ரீதியான தேவைகளை அளிப்பதில் பொறுப்புடையவராக இருக்கின்றார். [8]"இசைந்து" என்பது ஆதி. 2:24ல் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையின் மொழியாக்கமாக உள்ளது. [9]*Don and Jane McWhorter, *Living Together in Knowledge* (Huntsville, Ala.: Publishing Designs, 1988), 60. *[10]''திருமணம் மற்றும் திருமண முறிவுபற்றிய போதனை'' என்ற துணைப் பாடத்தைக் காணவும்.*

*[11]இந்த வாக்கியமானது, பாடக் கருத்து ஒரு பிரசங்கத்தில் எடுத்துரைக்கப்படுவதாக யூகிக்கிறது. இது ஒரு வகுப்பில் பயன்படுத்தப்பட்டால், எடுத்துரைப்பு கூறப்பட்டுக் கொண்டிருக்கும்போதே கேள்விகள் கேட்கும்படி உற்சாகப் படுத்தப்படலாம்.*

# திருமணம் மற்றும் திருமண முறிவு பற்றிய போதனை

திருமண முறிவு என்பது பரவலாக மேலோங்கி வருகையில், சில வேளைகளில் இந்தப் பாடத்தின்மீதான போதனை பெருகுவதற்குப் பதிலாகக் குறைகிறது. பிரசங்கியார்கள் ஒருவேளை, உணர்வுகளைப் புண்படுத்தப் பயம் நிறைந்தவர்களாயிருக்கலாம். திருமணம் மற்றும் திருமண முறிவு பற்றி நான் பிரசங்கிக்கும் வேளையில், அல்லது போதிக்கும் வேளையில் எனது அணுகுமுறையானது பின்வரும் வரிகளுடன் செல்லுவதாயிருக்கிறது: ‘‘உங்களில் சிலர் திருமண முறிவில் காயப்பட்டிருக்கலாம். விஷயம் அப்படியிருப்பினும் அல்லது இல்லாதிருப்பினும், திருமணம் என்பது வாழ்வு முழுவதற்குமானது என்பதை நமது இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் நான் தெளிவாக்குவதை நீங்கள் விரும்புவீர்கள் என்று அறிகின்றேன்.’’ இந்த அணுகுமுறைக்கான பதிலானது அடிப்படையில் நேர்மறையானதாகவே இருப்பதாகக் காணப்படுகிறது. நான் போதிக்கையில், சிலவேளைகளில் மத்தேயு 19:3-9 மற்றும் மாற்கு 10:2-12 ஆகியவற்றின் திறவுகோல் கருத்துக்களை நான் மனக்கண்ணில் காண்கின்றேன்.

இயேசு, ஒரு புருஷன் தனது மனைவியுடன் திருமணத்தில் இசைந் திருப்பதைப்பற்றிப் பேசினார் (மத். 19:4, 5).




இவ்விருவரும் சட்டப்பூர்வமான இணைப்புகளில் மட்டுமின்றி,[1] தேவனாலும் இவர்கள் “ஒன்றாய் இணைக்கப்பட்டு” இருக்கின்றனர் (மத். 19:6).




இவர்கள் மனிதர்களால் “பிரிக்கப்பட்டாலும்” (மத். 19:6) - அதாவது, திருமணம் முறிக்கப்பட்டாலும் (×) அவர்கள் தேவனால் இணைக்கப் பட்டவர்களாகவே இருக்கின்றனர்.



வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர்கள் இன்னமும் திருமணமான நிலையிலேயே இருக்கின்றனர்.

இவ்விதமாக, ஒரு ஆண் தமது மனைவியை ஒழுக்கவீனம் என்பதைத் தவிர வேறெந்தக் காரணத்திற்காவது திருமண முறிவு செய்து, இன்னொரு பெண்ணைச் சேர்த்துக் கொண்டால், அவர் விபசாரக் குற்றம் செய்தவரா யிருப்பார் (மத். 19:9).[2] தேவனுடைய பார்வையில் இவர் இன்னமும் தமது முதல் மனைவியுடன் திருமண பந்தத்தில் இருப்பதால் இது இவ்வாறுள்ளது.




இது தனது கணவரைத் திருமண முறிவு செய்து, இன்னொரு ஆணைச் சேர்த்துக்கொள்ளும் பெண்ணுக்கும் உண்மையாக உள்ளது (மாற். 10:12).




திருமணத் துணை ஒருவர் அவரது அல்லது அவளது திருமண வாக்குறுதிகளுக்கு உண்மையற்றுப் போயிருந்த சூழ்நிலை ஒன்று மட்டுமே தரப்பட்ட ஒரே விதிவிலக்காக உள்ளது.[3] விஷயம் அவ்வாறு இருக்கும் போது, குற்றம் இழைக்காத நபர் அவரது அல்லது அவளது வாழ்க்கைத் துணையைத் திருமண முறிவு செய்துவிட்டு தேவனுடைய மகிழ்வற்ற தன்மையினால் கசப்பு ஏற்படுத்திக் கொள்ளாமலேயே[4] மறுதிருமணம்[5] செய்துகொள்ள முடியும்.

---

குறிப்புகள்

[1]நாம் யாவரும் நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது (ரோமர் 13:1). இது சட்டப்பூர்வமான திருமணத்தை அமைக்கின்ற சட்டங்களையும் உள்ளடக்குகிறது. [2]"வேசித்தனம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையை, யாத்திராகமம் 20:14ல்

உள்ளதுபோல, பாலுறவு தொடர்பான எந்தப் பாவத்தையும் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்த முடியும். இது குறைந்தபட்சம், திருமணமான ஒரு நபராவது ஈடுபட்ட பாலுறவு தொடர்பான பாவத்தைக் குறிப்பிடத் திட்டவட்டமான கருத்தில் பயன்படுத்தப்பட முடியும். இவ்வசனப்பகுதியில் இது இந்தப் பிந்திய கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. [3]இந்தத் துணைப்பாடத்தில் மேம்படுத்தப்பட்ட வரைவட்டவணையை நான் பயன்படுத்தியபோது, முடிவில் பின்வரும் வார்த்தைகளை இதன் கீழ் எழுதுவதுண்டு: “விதிவிலக்கு: ஒழுக்கவீனத்திற்காக.” கிரேக்க மொழியில், “வேசித்தனத்தினிமித்தமேயன்றி” என்றுள்ளது. “வேசித்தனம்” என்பது பாலுறவு ரீதியான எந்தப் பாவத்தைக் குறிப்பதற்குப் பொதுவாகவோ அல்லது திருமணமாகாத தனிநபர்கள் இருவரிடையே உள்ள பாலுறவு ரீதியான பாவத்தைக் குறிப்பதற்குத் திட்டவட்டமாகவோ பயன்படுத்தப்படக்கூடும். இவ்வசனப்பகுதியில், இது திருமணத்திற்குப் பின்பு செய்யப்பட்ட பாலுறவு ரீதியான எந்தப் பாவத்தையும் குறிப்பதற்குப் பொதுவான கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது உறுதி. [4]இயேசுவின் வார்த்தைகள், “குற்றமிழைக்காத நபரின்” பகுதியில் திருமண முறிவை அனுமதித்ததே தவிர, அதைக் கட்டளையிடவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். திருமணமுறிவு என்பது ஒருபோதும், “வேத ரீதியான ஒரு காரணம்” இருந்தபோதிலும் கூட, இலேசானதாக எடுத்துக் கொள்ளப்படக்கூடாது. இன்னமும், பிள்ளைகளின்மீது பாதிக்கக் கூடிய கடுமையான விளைவுகள் உள்ளன. “நேர்த்தியான திருமண முறிவு” என்பதாக ஒன்றும் இருப்பதில்லை. [5]“ஒழுக்கவீனத்தினிமித்தமே தவிர” என்பது திருமண முறிவு செய்தலை மட்டுமின்றி, இன்னொருவரைத் திருமணம் செய்வதையும் மாற்றியமைக்கிறது என்று நான் நம்புகின்றேன் - இவ்விதமாக இது மறுதிருமணத்தை அனுமதிக்கிறது. இருந்தபோதிலும், இவ்வசனப் பகுதியானது திருமண முறிவை அனுமதிக்கிறது ஆனால் மறு திருமணத்தை அனுமதிப்பது இல்லை என்று சிலர் நம்புகின்றனர் என்பதை நீங்கள் அறிய வேண்டும்.